BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## இன்னும் சிறப்பாக மீண்டு வாருங்கள். ப்ராம்ப்ட்டன் நகருக்கே தடுப்பூசி செலுத்துங்கள் (Get Back to Better. Vaccinate Brampton)

*நகர நிர்வாகம் வேக்ஸினேட் ப்ராம்ப்ட்டன் (Vaccinate Brampton) எனும் பிரச்சாரத்தை துவக்கி குடியிருப்புவாசிகள் அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள ஊக்கமளித்து வருகிறது*

**ப்ராம்ப்ட்டன்,** ON (June 2, 2021) **–** தடுப்பூசி செலுத்துவது தொடர்ந்து நடைபெறுவதாலும், இந்தக் கோடைப்பருவத்தில், தடுப்பூசி வரவு அதிகரிப்பதைப் பொருத்து - தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் அளிக்கப்படுவதை வேகப்படுத்துவதற்கான மாகாண அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, நகர நிர்வாகம் தனது "இன்னும் சிறப்பாக மீண்டு வாருங்கள், ப்ராம்ப்ட்டன் நகருக்கே தடுப்பூசி செலுத்துங்கள்" (Get Back to Better. Vaccinate Brampton) எனும் பிரச்சாரத்தை முடுக்கி விட்டிருக்கிறது; இது ப்ராம்ப்ட்டன் மற்றும் பீல் பிரதேசங்களில் தடுப்பூசி செலுத்தும் வேகத்தை முடுக்கி விடுவதற்கேயாகும்.

"இன்னும் சிறப்பாக மீண்டு வாருங்கள், ப்ராம்ப்ட்டன் நகருக்கே தடுப்பூசி செலுத்துங்கள்" (Get Back to Better. Vaccinate Brampton) எனும் பிரச்சாரமானது, தடுப்பூசி செலுத்தப்படவேண்டும் எனும் முடிவினை, செல்வாக்கு செலுத்தும் உள்ளூர் ப்ராம்ப்ட்டன்வாசிகள் ஏன் மேற்கொண்டார்கள் என்பதன் தனி நபர் பின்னணிக் காரணத்தின் மீது கவனம் செலுத்துகிறது; மற்றும் இந்த பிரச்சாரமானது, குடியிருப்புவாசிகள் தங்களுக்கான தடுப்பூசி டோஸ்கள் கிடைக்கப்பெறும்போதே அவர்கள் அனைவரும் இந்த தடுப்பூசிகளை செலுத்திக்கொள்வதன் மூலமாக, சமுதாயத்தினர் தங்களைச் சுற்றியிருப்பவர்களை பாதுகாத்து, கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக தாங்கள் இழந்த வாழ்வின் அம்சங்களை திரும்ப அடைவது எப்படி எனவும் எடுத்துரைக்கிறது.

நமது சமுதாயம் தானாகவே இன்னும் சிறப்பாக மீண்டு வருவதற்கு, தடுப்பூசிகள் நமது சமுதாயத்தில் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. கோவிட்-19 தொற்றின்போது ஒவ்வொருவர் வாழ்வும் வெவ்வேறு விதத்தில் பாதிப்படைந்துள்ளது, மற்றும் தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்காக அனைத்து குடியிருப்புவாசிகளும் தங்களுக்கேயான காரணம் கொண்டுள்ளனர்.

**தடுப்பூசிகள்**

மே மாதம் 25 ஆம் தேதிப்படி, 357,008 குடியிருப்புவாசிகள் **–**அல்லது 52.3 சதவீதம் பேர் **–** தங்களின் கோவிட்-19 தொற்றுக்கு எதிரான முதல் டோஸ் தடுப்பூசியை செலுத்திக்கொண்டனர். 12 க்கும் மேற்பட்ட வயதுகொண்ட, பீல் பிரதேசத்தில் வசிக்கின்ற, வேலை செய்கின்ற மற்றும் பள்ளியில் படிக்கின்ற தனி நபர்கள் இப்போது தங்களுக்கான முதலாவது டோஸ் செலுத்திக்கொள்வதற்காக, பீல் பகுதியில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

2021, மே மாதம் 28 ஆம் தேதியன்று, ஒன்ட்டேரியோ அரசாங்கம், கோடைக் காலத்திற்குள்ளாக இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் செலுத்திவிட வேண்டும் என்னும் இலக்குடன் வேகம் கூட்டுகிறது என்று அறிவித்தது. போதுமான தடுப்பூசி டோஸ்களின் வரவு இருக்கும் பட்சத்தில், தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என விருப்பப்படும் பெரும்பாலான ஒன்ட்டேரியோ குடியிருப்புவாசிகள் அனைவரும் தங்களுக்கான டோஸை பெற்றுக்கொள்ள இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது, பீல் பிரதேசத்தில் வசிக்கின்ற 80 க்கும் மேற்பட்ட வயதுடையோர், தங்களுக்கான இரண்டாவது டோஸை பெற்றுகொள்ளும் கால இடைவெளி குறைக்கப்பட்டிருப்பதால் அதற்காக முன்பதிவு செய்துகொள்ள தகுதி பெறுகிறார்கள். மேலும் அதிக தகவல்களை இங்கு பெறலாம்.

**சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

குடியிருப்புவாசிகள் தடுப்பூசி செலுத்திக்கொண்டபோதிலும் கூட, நமது சமுதாயத்தினை பாதுகாப்பாக வைக்கவும், கோவிட்-19 தொற்று பரவலில் இருந்து தடுக்கவும் ஏற்படுத்தப்பட்ட அனைத்து சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் பற்றி நினைவூட்டப்படுகிறார்கள். ப்ராம்ப்ட்டன்வாசிகள் தொடர்ந்து முகக் கவசம் அணிய வேண்டும், உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிக்க வேண்டும், நல்ல சுகாதாரப் பழக்கம் கொண்டிருக்க வேண்டும் மற்றும் தங்களுக்கு உடல் நிலை சரியில்லாதோர் வீட்டிலேயே இருந்துவிட வேண்டும்.

உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு தடுப்பூசி செலுத்தி பாதுகாத்திடுங்கள்; அப்படி நீங்கள் இன்னமும் செய்யவில்லையானால், உங்களுக்கான முதலாவது கோவிட்-19 தடுப்பூசி டோஸ்-க்கு முன்பதிவு செய்துகொள்ளுங்கள். இரண்டாவது டோஸ் பெறுவதற்கான தகுதிபெறுதல் பற்றி அவ்வப்போதைய செய்தி பெற, மாகாணத்தின் தடுப்பூசிக்கு முன்பதிவு செய்துகொள்ளும் போர்ட்டலில் பார்த்து தெரிந்து கொண்டு, கூடிய விரைவில் உங்களுக்கான தடுப்பூசி டோஸ்-க்கு முன்பதிவு செய்துகொள்ளுங்கள். நாமெல்லாரும் ஒன்றுபட்டு, கோவிட்-19 தொற்று பரவலை தடுத்து நிறுத்துவோமாக.

**லின்குகள்**

- வலைத்தளம்- இன்னும் சிறப்பாக மீண்டு வாருங்கள். ப்ராம்ப்ட்டன் நகருக்கே தடுப்பூசி செலுத்துங்கள் (Website – Get Back to Better. Vaccinate Brampton).
- வீடியோ -இன்னும் சிறப்பாக மீண்டு வாருங்கள். ப்ராம்ப்ட்டன் நகருக்கே தடுப்பூசி செலுத்துங்கள் (Video – Get Back to Better. Vaccinate Brampton.)
- பீல் பிராந்திய தடுப்பூசிக்கு முன்பதிவு செய்யும் போர்ட்டல் (Region of Peel vaccine booking portal)
- ஒன்ட்டேரியோ அரசின் தடுப்பூசிக்கு முன்பதிவு செய்யும் போர்ட்டல் (Government of Ontario vaccine booking portal)
- கோவிட்-19 க்கு எதிரான ப்ராம்ப்ட்டன் நகர நடவடிக்கை (The City of Brampton's response to COVID-19)
- பீல் பிரதேசத்தில் கோவிட்-19 தொற்று நோயாளிகள் (Cases of COVID-19 in Peel

அறிஞர் கூற்று

"சமீபத்தில் மிதவெப்பமான பருவகாலம் தொடங்கியதன் காரணமாக, அனைத்து ப்ராம்ப்ட்டன்வாசிகளும், வரவிருக்கும் நல்ல காலத்திற்கான ஒளிக்கீற்றை பார்க்கிறார்கள் என எனக்குத் தெரியும். தடுப்பூசிகள் நமக்கு

முற்றிலும் அத்தியாவசியமான பங்காற்றுகிறது; நாம் இன்னாள் வரை பார்க்க முடியாதிருந்தவர்களைப் பார்ப்பது, குழுவாக பங்கேற்பது மற்றும் நமக்குப் பிடித்தமான வெளியிடங்களில் செயல்பாடுகளை மேற்கொள்வது - இதையெல்லாம் செய்ய அனுமதிக்கும். முதலாவது டோஸ்-ஐப் பெற்றுக்கொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்; மற்றும் இதுவரை தடுப்பூசி பெறாதவர்கள், ஆனால் தகுதி உள்ளவர்கள் தயவுசெய்து உங்களுக்கான தடுப்பூசிக்கு முன்பதிவு செய்யவும். இந்தக் கோடைப்பருவத்திற்குள்ளாக தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்று, அனைத்து சுகாதார பாதுகாப்பு நாடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் உண்மையிலேயே மீண்டும் நாம் நமது பாதைக்கு வந்து, ‘இன்னும் சிறப்பாக மீண்டு வருவோமாக’."

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

**-30-**

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca